# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2343/26 - 2023 අගෝස්තු මස 02 වැනි බදාදා - 2023.08.02

*2343/26 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை விவசாய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

9 ஆவது திருத்தம்

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2014, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதிய மற்றும் 1880/26 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விவசாய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**தனுஜா முருகேசன்,**
பதில் செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2023, யுலை 28.*

**பகுதி I**

திருத்த இலக்கம் 01 - 2016, யூன் மாதம் 15 ஆந் திகதிய மற்றும் 1971/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

திருத்த இலக்கம் 02 - 2017, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய மற்றும் 2032/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

திருத்த இலக்கம் 03 - 2019, ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதிய மற்றும் 2146/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்




*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*திருத்த இலக்கம் 04 - 2020, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிய மற்றும் 2162/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 05 - 2020, மாச்சு மாதம் 03 ஆந் திகதிய மற்றும் 2165/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 06 - 2021, யூன் மாதம் 29 ஆந் திகதிய மற்றும் 2234/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 07 - 2022, சனவரி மாதம் 26 ஆந் திகதிய மற்றும் 2264/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 08 - 2022, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய மற்றும் 2277/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

***பகுதி* II**

*7.2.2.1 கல்வித் தகைமைகள் :*

*7.2.2.1.1 விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாயப் பொருளியல் துறைகளுக்கு-*

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட விவசாயம் தொடர்பான நான்கு வருடப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்*

*7.2.2.1.2 விவசாய ஆராய்ச்சித்துறை-*

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட விவசாயம் தொடர்பான நான்கு வருடப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்*

*அல்லது*

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து தாவரவியல், இரசாயனவியல் அல்லது விலங்கியல் தொடர்பான நான்கு வருட விஞ்ஞானமாணி விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்*

EOG *08-0018*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*